சக்கரம் 2 | ஆரம் 5 செப்டம்பர் 2016

# சுதேசமித்திரன்

நமக்கு தொழில் நாட்டுக்கு உழைத்தல்: இமைபொழுதும் சோராதிருத்தல்.



தந்தை பெரியார் பிறந்த மாதம்

# தமிழ், ஏன் ?

தமிழ்க்காதலன்

நாம் நாள்தோறும் பார்க்கும் பலருள் சிலர் தமிழில் பேசவேண்டும், தமிழில் பெயர்வைக்கவேண்டும், தமிழில் கல்வி கற்க வேண்டும் என்று வலியுறுத்த காண்கிறோம் . அவர்களுக்கு நாம் வைக்கும் பெயர் "தமிழார்வலர்கள்"! ஆனால் அந்த பெயர் பொருத்தமானதா? என்று அறத்தையும் அறிவையும் அளவுகோளாய் வைத்து சிந்தித்தால் புரியும், அவர்களை தமிழார்வலர் என்பதைவிட தமிழர் என்றழைப்பதே சிறந்ததாகும், ஏனென்றால் முதலாவதாக இயற்கையாகவே ஒவ்வொரு மனிதனும் தன் மொழியினைப்பற்றி தெரிந்து கொண்டு அதன் மரபை பின்பற்றி வாழ்ந்தால் தான் அவனை அந்த இனத்தனைச்சார்ந்தவன் என்று சொல்லமுடியும், இரண்டாவதாக அறத்தாலும் அறிவாலும் வளர்ந்தவனே நல்ல மனிதன் ஆவான், தன் மொழியை நன்கு அறிந்தால் மட்டும் அம்மொழி கூறும் அறத்தையும் நுண்ணறிவையும் அறிந்து வாழ்வில் மென்மேலும் உயர்ந்து எல்லாவுயிர்க்கும் நன்மை பயக்கமுடியும், நல்ல மனிதனே நல்ல தமிழன் என்ற மரபும் உண்டு, மூன்றாவதாக தமிழார்வலர் என்றால் அது சாலப்பெரியப்புலவர்களையே குறிக்கும் தமிழைப்பற்றி உண்மையை மட்டும் எடுத்துச்சொல்லும் தமிழடியனுக்கு இப்பெயர் மிகுதியாகும்! ஆக, நாம் தமிழ்ப்புலமையைக்கண்டு வியக்கும் தமிழார்வலர் என்று சொல்லப்படும் மனிதர்களையே வெறும் தமிழர் என்று அழைப்பதுதான் பொருந்தும் என்றால் நாம் இன்னும் தமிழர் என்ற தகுதியைக்கூட எட்டவில்லை என்பது தானே உண்மை! இந்த சொல்லாடலினால் நம் மொழியின் மரபின் அருமையை அறியாமல் அறிவிலிகளாய் வாழ்கிறோம் என்பதைத்தெளியலாம்! குருதியால் மட்டுமே தமிழாராக இருக்கிறோம் என்பதை குற்றவுணர்வோடு வருந்ததான் வேண்டும்! போனது போகட்டும், நாம் எப்படி அறத்தாலும் அறிவாலும் மரபாலும் தமிழராவது என்று கேட்டால் அதுக்கு ஒரே மந்திரம் தமிழ்ப்படி! அறிவியல்மையமான இக்காலத்தில் எந்த ஒரு செயலும் மெய்ப்பித்து காட்டவில்லையென்றால் அது ஏற்றுக்கொள்ளப்படாது என்ற நிலை வந்துவிட்டது என்பதனாலும் மேலும் நான் இங்கு சொன்ன அறத்தாலும் அறிவாலும் மரபாலும் வளர்ச்சி தமிழ் படித்தால் நிகழும் என்ற கூற்று மெய்யென்று மெய்ப்பிக்கும் பொறுப்பு எனக்கு இருப்பதானாலும் அதுக்கும் மேல் நான் தமிழன் என்ற உணர்வினாலும் தேன்கடல்

தமிழின் இயல்பில் ஒரு துளியளவை மட்டும் விளக்குகிறேன்! ஒரு மொழியின் இயல்பை பல வழிகளில் விளக்கலாம். அதன் சொற்களில் இருக்கும் இயல்பை வைத்து விளக்கலாம், இலக்கியத்தை வைத்து விளக்கலாம், இசையை வைத்து விளக்கலாம், வரலாற்றைக்கொண்டு விளக்கலாம்! நான் வெறும் வழக்கில் பயன்படுத்தும் சொல்லைக்கொண்டே விளக்கபோகிறேன் ! எதை விளக்கப்போகிறேன்? இந்த சொற்களில் மறைந்துள்ள ஆழ்ந்த அறிவியல், அறம், மரபு, குடி, அரசியல், உளவியல் செய்திகளை விளக்கப்போகிறேன்!




தமிழ் என்றால் இனிமை, நீர்மை என்று பொருள்! தமிழ் பேசுவதற்கும் கேட்பதற்கும் இனிமையான மென்மையான மொழி, மேலும் புதுப்புது கண்டுபிடிப்புகளுக்கு ஏற்ப தன்னைப்புதுப்பித்துக்கொள்ளும் நீர் போன்ற வளைந்த தன்மை கொண்டமொழி - இதுவே ஒரு நல்ல பாடத்தைச்சொல்கிறது . மக்களே! என்னைப்போன்றே நீங்களும் எல்லாவுயிர்க்கும் சொல்லிலும் செயலிலும் இனிமையாய் இரு என் கண்ணே! நீயும் பலத்துறை அறிவுகளைக்கற்று என்று புதுப்பித்து கொண்டு இளமையாய் இரு என் அன்பே என்று தமிழ்த்தாய் சொல்லும் மறைவான செய்தியை நம் குழந்தைகளுக்கு கேட்கச்செய்வோம்! சிந்தியுங்கள் வெறும் மொழியின் பெயரளவிலேயே எத்தனைப்பெரிய சிந்தனை இதை உணராமல் போனது யார் குற்றம் என சிந்தியுங்கள்!

## அறிவியல் செய்தி

உலகம் என்ற சொல் தெரியாவார் உண்டா? உலகமே மூடநம்பிக்கையில் இருந்த காலத்தில் உலகம் சுழலும் தன்மையுடையது என்று உணர்ந்த தமிழன் அதை "உலகம்" என்றான் . நான் ஏதோ கட்டுக்கதை சொல்கிறேனா என்று தோன்றலாம் !

இதோ தரவுகள்! உல என்ற சொல்தான் உலகம் என்ற சொல்லுக்கு வேர்ச்சொல் அல்லது அடிச்சொல்! அதாவது உல என்ற சொல் எங்கெல்லாம் வருகிறதோ அங்கெல்லாம் ஒரு இயக்கத்தை குறிக்கும். உலகொதிக்குது என்று சொல்லும் போது சோற்றுப்பானையில் உள்ள அரிசி தண்ணீருடன் சேர்ந்து மேலும் கீழுமாய் வந்து போகிறது என்று தானே பொருள்? ஆக இங்கு ஒரு இயக்கம் உள்ளது! அதுபோல உலா வருதல் என்றால் நடப்பது என்ற இயக்கத்தை குறிப்பது நான் சொல்லி தெரிய தேவையில்லை! மருந்தை உலுக்கிய (குலுக்கிய என்பது மருவிய சொல்) பின்பு பயன்படுத்தவும் என்று படித்திருப்போம்! உலுக்கும் போது ஒரு இயக்கம் இருப்பதை காணுங்கள்! இன்னும் பல சொற்கள் உள்ளன விரிவஞ்சிவிடுகிறேன்! அதனால் உலகம் சுழலும் இயக்கமுடையது என்று நன்கு உணர்ந்தே இப்பெயரை யாக்கினார் என துணியலாம்! சிந்தித்து பாருங்கள் 5000 யாண்டுகளுக்கு முன் இருந்த அறிவியல் சிந்தனையை எப்படி ஒரு சொல்லில் அடக்கினார்கள் என்று! இதை இரண்டு வயது குழந்தைக்கு சொல்லித்தந்தால் அதன் அறிவு வளர்ச்சி சிந்திக்கும் திறன் எத்தனை வளப்படும் என்று உணரவேண்டும்! ஆங்கிலத்தில் எர்த் என்ற சொல்லுக்கு இவ்வாறு அறிவியல் சார்ந்த பொருளில்லை!

## காதல் செய்

சக்தி ராகவா

மேனி நிறம் பார்த்து
மெருகேறும் நகை சேர்த்து!
மெல்ல வரசொல்லி
மேலோட்ட பார்வையில்

பெண் பார்க்கும் படலம்!
பெண் இங்கே சடலம்!



மேலாளர் வேலை
மேல்தட்டு வாழ்க்கை
சொந்தமாய் வீடு
சொர்கமாய் புகுவிடம்

ஆண் மணமாகும் நேரம்
அவன் ஆயுளே போகும்!

இந்திய நிலையிது - சில
காதலால் கலையுது!
சாதிகளில் சிக்காமல்!
தகுதி பார்க்காத
தரமான வாழ்க்கை!

மேலைநாட்டினிலோ
வேலை தேவையில்லை
வேறு சாதியா கேட்பதில்லை
மனமொத்தால் திருமணம்
மனமுறிவு மறுமணம்!

இங்கும் அங்கும் இயல்புதான்
நல்லதும் கெட்டதும்!
கலந்து காதல் செய்
கடைசிவரை காதல் செய்!

# அயல்நாட்டு வாழ்கை

க. விஜயகிருசுணன்

“சொர்க்கமே என்றாலும் அது நம்மூர போல வருமா” என்ன ஒரு அழகான பாடல் வரி, உண்மையில் இந்த வரிகளுக்கு உண்மையான அர்த்தம் தெரிய வேண்டுமெனில் நாம் வெளிநாடுகளில் வேலை செய்யும் பொழுது தான் அறிய முடியும். குறிப்பாக அரபு நாடுகளில் பணிபுரிபவர்களுக்குத்தான் நன்கு தெரியும். அதிகாலையில் ஆவி பறக்கும் டீ குடித்து வளர்ந்தவர்கள் அதிகம் அறியமாட்டார்கள் இங்கு அதிகாலையில் தண்ணீர் குழாயை திறந்தாலே ஆவி பறக்க வரும் நீரை பற்றி.



குளிர் சாதன அறையில் வேலை செய்பவர்களை பற்றி அதிகம் சொல்ல தேவையில்லை, பெரிய பெரிய கட்டடங்களில் வேலை செய்பவர்களின் நிலை தான் பரிதாபம். நிழல் என்று ஒதுங்கினாலும் நெருப்பை உமிழும் வெப்பம். பகல் முழுதும் வெயிலில் நொந்து மாலை ஆறுக்கு ஆறு அறையில் எட்டு பேருடன் படுத்து தூங்கும் பொழுது மனம் சொல்லும் எதற்காக இங்கு வந்து கஷ்டப்படவேண்டும் என்று அப்பொழுது மறு எண்ணம் தோன்றும் வீட்டில் நம்மை நம்பி வாழும் மகிழ்ச்சியான குடும்பம், மறுகணமே மனம் மீண்டும் உழைக்க சென்றுவிடும்.

அரேபிய வாழ்க்கை இது போன்ற ஒரு அனுபவம் என்றால் ஐரோப்பிய நகரங்களின் வாழ்க்கை வேறு விதமானது.

பிறந்த குழந்தையின் முதல் ஸ்பரிசத்தை தொட ஆண்டுகள் காத்திருப்பது தொடங்கி குடும்பத்தின் பல மகிழ்ச்சியான தருணங்கள் தொலைபேசிகளின் மட்டுமே கலந்துகொள்ள முடியும். இது வெளிநாட்டு வாழ்க்கையின் கடினமான பக்கங்கள் என்றால் உண்மையில் இது போன்ற ஒரு அனுபவம் ஒவ்வொருவர் வாழ்க்கையிலும் தேவை என்றும் கூறலாம். கடல் கடந்து செல்கையிலேயே உண்மையில் நாம் வாழ்க்கையில் என்ன நிலையில் உள்ளோம் என்பதை உணர முடியும். பிற மொழி பிற கலாச்சாரம் இவற்றை உண்மையில் அறிய இது போன்ற ஒரு பயணம் அவசியமாகிறது. குண்டு சட்டியில் குதிரை ஓட்டாதே என்று ஒரு பழமொழி உண்டு குதிரையாக ஊட வேண்டிய வயதில் இந்த ஒரு ஓட்டம் நிச்சயம் தேவை என்பதே என் பொதுவான கருத்து. அதே சமயம் நம் குடும்பத்து நாம் தேவை படும்போழுது அவர்களுடன் இருப்பது நலம்.

## THE PARADOX OF OUR CHOICE

Kemmy Jose

We choose to be informed rather than educated
We choose to be enslaved rather than employed;
We prolong problems instead of being eradicated
Poverty can’t be solved, but bombs can be deployed.

We choose to have empty homes but homeless people
We choose to vote for morons but the real leaders;
We tend to print money but have an economic bubble
And we know it’s not good, yet strive to be breeders.

We choose glass prisons over the joy of freedom
We choose to consume artificial feed over natural food;
We allow devices over leisure to kill our boredom
In the end, though it’s bad, we convince ourselves its good.

We choose to have cheaper technology, but costlier healthcare
We choose patriotism and defend imaginary borders over world peace;
We believe in democracy, but capitalism gets the bigger share
It has completely become impossible to live with ease.

We choose to have choice but our choices are manipulated
We choose to decide, but our decisions go in vain;
It might occur to be that this is quite exaggerated
But the paradox of our choice will always remain.

**NOTES:**

This poem was a product of my 'free thinking'. The Paradox of Our Choice dwells upon the central theme that though we have the liberty to choose, it is not what it seems from the back-end. For those of you who are educated enough, you already know that the world is not controlled by political leaders alone, but there is a group of the elite which controls what we all do. We think we vote and we think we have democracy. Britain still has the queen and the U.S.A still banks only on the Democrats and Republicans. Reason enough?

If you still want to know, I belong to the world's largest "democracy", but my vote has never made a difference. The Paradox of Our Choice is real, and as long as we have someone controlling us, it will remain.

## Stop Waiting for Happiness to Arrive!

Livin3.com

Too many people think of happiness as the ultimate goal of life. But, if you're waiting for happiness to arrive then it's likely that it never will!

You convince yourself that life will be happy when you're married. When the mortgage is paid off. When you have children. When the weekend arrives. Next summer. Whatever particular dream you have, you're sure that when you reach it you'll finally be happy.

Unfortunately, this way of thinking is a trap. You're always wanting something more, always looking forward to a time when you'll be "happy". And, if you fall into this trap, you'll never reach that goal. When you get married, you might wish your partner was more affectionate or more proactive. When you have children, you might find their

young age restrictive and long for them to grow up too quickly. When you've paid off that mortgage you might long for a better house, a better neighbourhood, a better car. Life will pass you by with that goal of happiness forever in sight but never quite in reach.

Happiness should not be your life's goal, it should be your life! The only time to be happy is right now! It's state of mind, not a set of accomplishments or the accumulation of material things. There is no time to achieve happiness other than right now. You must accept that life will always have challenges and things will not always go your way and make the decision to be happy right now.

Instead of feeling disappointed when things don't work out the way you'd hoped, feel grateful for the experience. Instead of dreaming of a brighter, happier, richer tomorrow, make today as wonderful as you can. Treasure each moment that you have air in your lungs and treasure the people you share those moments with.

Alfred D. Souza put this perfectly when he said, "For a long time it had seemed to me that life was about to begin – real life. But there was always some obstacle in the way, something to be gotten through first, some unfinished business, time still to be served, or a debt to be paid. Then life would begin. At last it dawned on me that these obstacles were my life."

His perspective helped me to see that happiness is a conscious decision and that I can make it right now. He's not saying that having dreams, goals and ambitions is a bad thing. Thinking of the future and having aspirations is essential to leading a happy and fulfilled life. The trick is not to let thoughts of the future overshadow your enjoyment of the present and the appreciation of the things and people you have in your life right now!

There is no way to happiness: happiness is the way!

Stop waiting to meet your soul mate, to get married, to have children, to pay off your mortgage. For Friday night, for payday, for the summer time. Stop waiting for happiness to arrive and simply decide to be happy! It's not some great goal or destination, it's a journey and a way of life. Why not try it out today?

Work like you don't need money.

Love like you've never been hurt.

And dance like no one's watching!

**தங்களது மேலான கருத்துகளைத் தெரியப்படுத்துங்கள்.**
**emagz@thozhan.org / 96292 24696 / 99411 42188**